2016 ஜனவரி 21]

திரு. அ. சவுந்தரராசன்: *ஆகவே, ஜல்லிக்கட்டை நாம் மீண்டும் நடத்துவதற்குரிய நடவடிக்கையை மத்திய அரசாங்கம் எடுக்க வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை அவையில் நிறைவேற்ற வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், அவையில் நீங்கள்தான் விவாதத்தில் பேசப் போகின்றீர்களே? (குறுக்கீடு) நீங்கள்தானே பேசப் போகின்றீர்கள்? (குறுக்கீடு) அப்போது பேசலாம் அல்லவா?*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு ஆகியவை தமிழ்நாட்டினுடைய பாரம்பரியமான பண்பாட்டுக் குறியீட்டு விளையாட்டுகள். எனவே, மத்திய அரசு, வன விலங்குப் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து காளையை நீக்கி, அதை நடத்துவதற்கு வலியுறுத்தி உரிய ஒரு சிறப்புத் தீர்மானத்தை சட்டமன்றப் பேரவை இயற்ற வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, என்னவென்று சொல்லுங்கள்?*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலங்குகளைப் பாதுகாக்கின்றோம் என்ற பெயரிலே தமிழக மக்களுடைய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டுக்கு ஏற்பட்டு உள்ள தடையை நீக்கக்கூடிய வகையில் தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனித நேய மக்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, என்னவென்று சொல்லுங்கள்?*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை மாவட்டம், மயிலாடுதுறை அருகே திருநாள்கொண்டசேரி என்ற கிராமத்தில் 70 வயது நிரம்பிய ஒரு முதியவர் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இப்போது வாய்ப்பு இல்லை. அதையெல்லாம் நீங்கள் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் பேசும்போது பேசலாம். (குறுக்கீடு)*